செ.வெ.எண் . 118 நாள் . 05.02.2011

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற 13.05.2006 முதல் இன்று வரை ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட செவிலியர்கள் 7242 ஆகும். இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட செவிலியர்களில், 5476 செவிலியர்கள் கால முறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். உயர்நீதிமன்ற இடைக்கால தடை விலக்கப்பட்ட பின், புதியதாக ஒப்பந்த அடிப்படை செவிலியர்களாக 4115 செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர். மருத்துவத்துறையில் தற்போது 17,240 செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இன்று (05.02.2011) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் 201 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

மேலும், ஒப்பந்த அடிப்படையில் 1500 செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர், தமிழ்நாடு சுகாதாரத்திட்டத்தின் கீழ் கூடுதலாக 2,359 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

1/1